

கோவை மாநகராட்சி
தெற்கு மண்டலத்தை
தனியார்க்கு தாரை வார்த்து
துப்புரவு தொழிலாளர்களை
கொத்தடிமையாக்கும்
முயற்சியை கண்டித்து....



# தொடர் முழக்க போராட்டம்

- காலை 10.00 - 5.00 வரை
- 15.12.2004 - புதன்
- தமிழ்நாடு ஹோட்டல் முன்பு
  மத்திய பேருந்து நிலையம்
  கோவை

## ஆதித்தமிழர் பேரவை

**கோவை மாவட்டம்**

இந்தியா ஒளிர்கிறது, வல்லரசு நாடாக மாறப்போகிறது என்று வாய் கூசாமல் பேசிவரும் ஆளும் வர்க்கப் பார்ப்பன முதலாளித்துவக் கூட்டம் - தான் வாழ்வதற்கும், அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும், மனித சமூகத்தை சாதியின் பெயரால் மனிதனை மனிதன் வெறுத்து ஒதுக்குவதற்கும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மீது இழிவானத் தொழிலை திணித்துள்ளது இந்த நாகரீக உலகம்.

அறிவியலில் வளர்ந்தும் கூட மனிதனின் மலத்தை மனிதன் கையால் அள்ளும் கொடுமை வேறு எந்த நாட்டிலும் இல்லாத இக்கொடுமை இந்நாட்டில் இருக்கிறது. ஒரு தாய் தன் குழந்தையின் மலத்தை ஓர் ஆண்டு மட்டும்தான் சுத்தம் செய்கிறார். ஆனால் ஒரு துப்புரவுத் தொழிலாளி தன் வாழ்நாள் முழுவதும் இந்த சமூகத்தின் அசிங்கத்தை, மனிதக் கழிவுகளை அள்ளி சுமக்கின்றனர்.

தொப்புள்கொடி அறுக்கும் போது வெளியில் வரும் நஞ்சு, தூமத்துணி, மலம், புற்றுநோயாளி, எய்ட்ஸ் நோயாளி பயன்படுத்திய பொருள்கள், அழுகிய பிணங்கள் போன்ற மனிதக்கழிவுகளை வாழ்நாள் முழுவதும் அள்ளி சுமந்து சமூகத்தை தூய்மைப்படுத்தும் இவர்கள் வாழ்வில், இவர்கள் குடியிருக்கும் வீடு, பகுதி கால்வைக்கக் முடியாத அளவுக்கு தூய்மைக் கேடாக விளங்குகிறது.

தங்குவதற்குக் கூட வீடு இல்லாமல் தெருக்களில் வாழ்க்கை நடத்துவதும் இரவு நேரங்களில் பன்றியுடன், ஆடு, மாடுகளுடன் படுத்து கிடப்பதும் மனித சமூகத்தை எட்டி உதைப்பதாக இருக்கிறது. இவர்கள் காலையில் 5 மணிக்கெல்லாம் எழுந்து ஊர்களை சுத்தம் செய்ய போகிறார்கள். ஆனால் இவர்களது வீடுகள் சுத்தம் இல்லாமல், இவர்கள் பிள்ளைகள் கவனிப்பாரற்று தலையில் எண்ணை இல்லாமல் உணவு இல்லாமல், உடம்பில் ஆடைகள் இல்லாமல் அனாதைகள் போல் வாழ்கிறார்கள்.

இதனால் கல்வி என்பது இவர்கள் வாழ்வில் கேள்விக்குறியாகிவிட்டது. கந்து வட்டி, வேலை செய்யும் இடங்களில் பெண்கள் மீது பாலியல் கொடுமை போன்ற எண்ணற்ற கொடுமைகள் இவர்களது வாழ்வில் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. ஒரு ஆதிக்கசாதிக்ாரர் துப்புரவு தொழில் செய்தால், அவர் மீது தீண்டாமை யாரும் கடைபிடிப்பது மில்லை, தீண்டத்தகாதவராகக் கருதுவதுமில்லை.

---

*மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவலம் போக்கிட...*

*கோவையில் டிசம்பர் 26 ல்*

**தூய்மை தொழிலாளர் மறுவாழ்வு மாநாடு**

அனைத்து நிலையிலும் கடைக்கோடியில் இருக்கும் சக்கிலியருக்கு மட்டும்தான் இத்தகைய அழிவுகள், கொடுமைகள். துப்புரவு தொழில் செய்யும் சக்கிலியருக்கு தேசிய துப்புரவு பணியாளர் மேம்பாட்டு ஆணையத்திற்கான உறுப்பினர் பதவி கொடுக்கப்படவில்லை. இப்பதவியை தலித் பிற சாதியருக்கு கொடுக்கப்படுகிறது. சுகாதார அதிகாரிகள் மட்டும் அனைத்து வசதிகளோடும் வலம் வருகிறார்கள். இது என்ன கொடுமை, இதை கேட்பதற்கு இங்கு யாரும் முன் வரவில்லை.

மனித உரிமை ஆர்வலர்கள், இந்திய தேசியவாதிகள், தமிழ் உணர்வாளர்கள், தலித் விடுதலையாளர்கள் மற்றும் பொதுவுடமை பேசுபவர்கள் போன்றோர் இவர்களுடைய பிரச்சினைகளை பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்பதை நாம் இப்போது உணர்ந்து உள்ளோம். துப்புரவுத் தொழிலாளர் தொழிற்சங்கங்கள் எல்லாம் இவர்களிடம் பணத்தை மட்டுமே எதிர்பார்க்கின்றனர். ஆனால் இவர்களின் துயரங்களில் அக்கறை காட்டவில்லை. துப்புரவு தொழிலை தனியார் மயமாக்கும் போது வாய்மூடி மவுனம் சாதித்த தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஆதிக்கச்சாதி தொழிற்சங்கங்களே என நமக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துகிறது. இவர்கள் நம்மை தீண்டத்தகாதவராக பார்க்கின்றனர்.

ஒரு சில தலித் அமைப்புகள் தன் பிழைப்புக்காக சங்கங்கள் நடத்தி வருகிறது. அதுவும் நீர்த்துப் போன நிலையில் நம்மை இன்றும் சிலர் ஏணிப்படியாக பயன்படுத்த நினைக்கிறார்கள். நோய்க்கு மருந்து கொடுக்காமல் புண்ணுக்கு களிம்பு பூசுவது போல பூசிவருகிறார்கள். எண்ணத்தில் மட்டும் சமத்துவம் சகோரத்துவம் பேசுவது எப்படி தீர்வு தரும். இத்தனை ஆண்டுகாலம் நாம் உழைத்ததினால் நமக்கு கிடைத்த பலன் வறுமை, பசி, கடன், கீழ்சாதிக்காரன், தீண்டத்தகாதவன் என்கின்ற பட்டங்களே.

இத்தனை ஆண்டுகளாய், உன்னுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்கவும், உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் போராட்டங்களை புறம் தள்ளியதால் இன்று கோவை மாநகராட்சி - தெற்கு மண்டலம் தனியார்க்கு தாரை வார்க்கப் போகிறார்களாம்.

**தோழனே, நம் போராட்டம் இனி சலுகைக்காக இல்லை.**
**நம் உரிமைக்காக களம் இறங்குவோம்**
**நம் இயக்கமான ஆதித்தமிழர் பேரவையில் இணைந்து**
**விடுதலையை நோக்கி எழுவோம்.**

## தலைமை

# கோவை தென்னரசு

துணைப்பொதுச் செயலாளர்

## முன்னிலை

**இளவேனில்**
மாநகர அமைப்பாளர்

**மு. முனுசாமி**
மாநகர செயலாளர்

**கோவை சைமன்**
மாநகர பொருளாளர்

**சுரேசு**
மாநகர இ. அணி

**ஆ.கி. திருமலை**
மாவட்ட நிதிச்செயலாளர்

**பேச்சிமுத்து**
சிங்கை நகர அமைப்பாளர்

**சித்தார்த்தன்**
சிங்கை மாநகர செயலாளர்

## தொடக்கஉரை

# கு. ராமகிருஷ்ணன்

தந்தை பெரியார் திராவிடர் கழகம் - பொதுச் செயலாளர்

**பெருமாவளவன்**
அமைப்பு செயலாளர்

**தமிழ்நாடு செல்வம்**
அம்பேத்கர் து. சு. ப. சங்கம்

**தீபா**
மகளிர் அணிச் செயலாளர்

**தி. சே. கோபால்**
இளைஞர் அணிச்செயலாளர்

**நீலவேந்தன்**
மாணவர் அணிச்செயலாளர்

**அ.சு. பழனிசாமி**
மேற்கு மண்டல செயலாளர்

**மாணிக்கம்**
ஒன்றிய அமைப்பாளர் - தொ.முத்தூர்

**வெண்மணி ராசன்**

**பெரியார்தாசன்**
மாணவர் அணி - கோவை

**சி. குப்புராசு**
மாநில அமைப்பாளர்

## நிறைவுரை

# இரா. அதியமான்

நிறுவனத்தலைவர்

*மனித நேய விடை காண திரண்டெழுவோம்*

*டிசம்பர் 26 ல்*

**தூய்மை தொழிலாளர் மறுவாழ்வு மாநாடு**